வெலிகேபொல பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகேபொல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் வெலிகேபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1(ஈ) பந்தி தவிர என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைததும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | காணி கட்டிடங்கள் மேம்படுத்தும் பெறுமதி ரூபா 19,407,606 இனை மூலதனமாக்கி இருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்யப்படுவதாக. | உரிய சொத்துக்களில் கிரயத்தை மூலதனமாக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அன்பளிப்பாக கிடைத்த இயந்திரங்கள் மற்றும் தளபாடங்களின் பெறுமதி ரூபா 299,369 தொகையை நிதி செயலாற்றல் கூற்றினுள் செம்மையாக்கியிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஆண்டிக்குரிய மூலதன வருமானம் மற்றும் செலவினத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2022 ஆண்டிக்குரிய அட்டுறு கடன் தவணை தொகை மற்றும் வட்டி பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 7,776,765 நடைமுறையல்லாத பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதி நிலைமை கூற்றினுள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத கடன்கொடுனர் உரியவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 1.4.1(அ) கீழ் சுட்டிக் காட்டியிருந்த கணக்கீட்டுக் குறைபாட்டை சரி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சுட்டிக் காட்டியுள்ள கணக்கீட்டுக் குறைபாட்டை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,051,853 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவினம் ரூபா 553,741 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் 17 அரச நிறுவனங்களில் ரூபா 69,814 ஆன நிலுவை மீதியொன்று மற்றும் 697 தனியார் அலகுகளிலிருந்து ரூபா 2,563,043 ஆக 714 வீதவரி அலகுகளிற்குரிய ரூபா 2,632,857 ஆன நிலுவையொன்று நிலவியதுடன், அந் நிலுவை மீதியை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமான பரிசோதகர் ஒருவர் இல்லாததால் வீதவரி அறவிடலிற்கு தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும். தற்போது அலுவலக கடமை உதவியாளர் ஒருவரினால் வீதவரி திரட்டப்படுவதாகவும், நாட்டில் நிலவும் நிலைமை வருமானம் குறைவதற்கு தாக்கம் செலுத்தியுள்ளதாக. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **ஏனைய வருமானம்** | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 21 அரச நிறுவனங்களிலிருந்து ரூபா 55,109 ஆன நிலுவை மீதியொன்று மற்றும் 2087 தனியார் அலகுகளிலிருந்து ரூபா 1,468,620 ஆக 2108 நீர் நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை நிர் கட்டணம் ரூபா 1,523,729 இனை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | நிலுவை தொகையை சபைக்கு அறட விரைவான நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| **கடையறை பரிசோதனை** | | |
| சபைக்கு சொந்தமான 20 பர்சஸ் அளவுடன் கூடிய வர்த்தக பெறுமதியுள்ள பெலகெவத்த காணியின் 09 துண்டுகள் வியாபார நடவடிக்கைகளிற்காக 09 குத்தகைகாரர்களுக்கு 1995 ஆண்டு முதல் நில குத்தகை அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அக் காணிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அவ்வறிக்கை கிடைக்காத காரணத்தால், 10 சதவீதப் படி அதிகரித்து மாதாந்த வரி தொகையொன்று அறவிடப்படுவதால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒவ்வொரு காணித் துண்டுகளிற்கும் உரிய நில அளவுகள் தொடர்பான உறுதிப்படுத்தல் ஒன்றை கணக்காய்விற்க சமர்பித்திருக்கவில்லை. | பெலகெவத்த காணிக்காக மதிப்பீட்டு அறிக்கையொன்றை கோரிய போதும், ஒவ்வொரு காணித் துண்டுகளிற்கும் உரிய நில அளவை இனங்காண முடியாததால் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளதாக. | சொத்துரிமையை உறுதிப்படுத்தி காணிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டு அதன் பிரகாரம் குத்தகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையினுள் மீளாய்வாண்டில் 732 மெட்ரிக் டொன் அளவான கழிவுப் பொருட்களை வெளியிடுவதற்காக ரூபா 3,833,740 ஆன கிரயமொன்றை, 10 ஆளணி உழியர்களுக்காக வாகனங்கள் மற்றும் 04 இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 980,490 ஆன கிரயமொன்றை மேற்கொண்டிருந்த போதும், அக் கழிவுப் பொருட்களை வெளியிடல் முறையாக மற்றும் சுற்றாடல் நேய முறைமையிற்கு மாற்றமாக நிலத்தில் குழிகள் தோன்றி அதனுள் கழிவு பொருட்களை வெளியிட்டு குழிகளை மூடுவதனூடாக பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. | கொம்போஸ்ட் கொட்டிலின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தியான உடனே கொம்போஸ்ட் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக. | முறையான கழிவு பொருள் முகாமைத்துவ கருத்திட்டமொன்றை திட்டமிட்டு அதை சுற்றாடல் நேயமாக செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |